www.agaram.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

**தரம் 10**

**மூன்றாம் தவணைப்பரீட்சை - 2018**

**சுட்டெண் :** ........................

**புவியியல் I, II** **நேரம் : மூன்று மணித்தியாலம்**

## புவியியல் I

- **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

**1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. ............................................................ சூழலில் உள்ள மூலக்கூறுகள் நீர்க்கோளம், வளிக்கோளம் மற்றும் கற்கோளம் என்பவற்றுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.
(புவிச், உயிர்ச், நீர்ச்)
2. மாறன் மண்டலத்தில் வெப்ப நழுவுவீதம் அல்லது சூழல் நழுவுவீதம் உயரே செல்லும் ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் ........................................................ பாகை செல்சியஸ் வெப்பநிலை வீழ்ச்சியடைகின்றது.
(0.64, 6.4, 0.064)
3. ............................................................ ஏரி பேரேரிகளில் மிகப்பெரிய ஏரியும் உலகில் இரண்டாவது பெரிய நன்நீர் ஏரியுமாகும்.
(விக்ரோரியா, சுப்பீரியர், பைக்கால்)
4. இன்று உலக இயற்கை இறப்பரின் மொத்த உற்பத்தியில் ............................................................ சதவீதமானது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது.
(95, 24, 6)
5. உலகில் ............................................................ வலயத்தில் அமைந்துள்ள பகுதிகளில் பாற் பண்ணைகள் அதிகளவில் பரம்பிக் காணப்படுகின்றன.
(வெப்ப, இடைவெப்ப, குளிர்)
6. இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 11.1% வரையான பங்கினை வழங்கும் ............................................................ துறை ஏற்றுமதி வருமானத்தில் 24% வரை பெற்றுக் கொடுக்கின்றது.
(விவசாய, கைத்தொழில், சேவை)
7. இலங்கையில் ............................................................ 610 மீற்றர் முதல் 1220 மீற்றருக்கு இடையிலான உயரமுடைய பிரதேசங்களில் பயிராகின்றது.
(உயர் நிலத் தேயிலை, மத்திய நிலத் தேயிலை, தாழ்நிலத் தேயிலை)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

8. ஆரம்ப காலங்களில் மோட்டார் வாகன உற்பத்தியில் ........................................................ குறைந்தளவு பங்களிப்பையே வழங்கியிருந்தாலும் இன்று முன்னணியில் திகழ்கின்றது.
(ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், சீனா)

9. அண்மைக் காலத்தில் இலங்கையும் கூட ........................................................ கைத்தொழிலாகப் படகுகளைக் கட்டும் கைத்தொழிலை ஆரம்பித்துள்ளது.
(தயாரிப்புக், பாக உற்பத்திக், பொருத்துக்)

10. இலங்கையில் வெண்களி உயர்தரமான ........................................................ உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது.
(பீங்கான், தரை ஓடுகள், மட்பாண்டப் பொருட்கள்)

**11 தொடக்கம் 15 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் 'ச' ஐயும் பிழையாயின் 'பி' ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

11. மாடிக் கட்டடங்கள் மற்றும் பாரிய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படுவதனால் கற்கோளத்தின் சமநிலை பாதிப்படைகின்றது. ச / பி

12. கண்டங்களின் எல்லையிலிருந்து சமுத்திரத்தை நோக்கிப் பரந்துள்ள ஆழங்குறைந்த நிலப்பரப்பில் கண்டச் சாய்வுகளுக்கு அப்பால் கண்டமேடைகள் காணப்படுகின்றன. ச / பி

13. பல உச்சிகளையும், சாய்வுகளையும் கொண்டு உயர் எழுச்சிகளுடன் கூடியதாகப் பரந்த நிலத்தோற்றங்களாகிய மலைத்தொடர்கள் பல பாரிய பிரதேசத்தில் பரந்திருக்கும் போது அதனை மலைத்தொடர்த் தொகுதி என அழைப்பர். ச / பி

14. பெரும்பாலான நாடுகளில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வெளிநாட்டவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். ச / பி

15. இலங்கையில் பல்வேறு விழாக் காலங்களில் தென்னம்பூ, தென்னை ஓலை என்பன பயன்படுத்தப்படுகின்றன. ச / பி

**16 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களுக்கு அ மற்றும் ஆ என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையிலான தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடைக்குரிய இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16. புவி வளிமண்டலத்தில் காணப்படும் பிரதான வாயுக்களின் பெயர்கள் நிரல் "அ" இல் காட்டப்படுகின்றன. அவற்றின் சேர்க்கை வீதம் நிரல் "ஆ" தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும் பொழுது கிடைக்கும் சரியான விடைத்தொகுதியினைத் தெரிவுசெய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. ஒட்சிசன் | A. 78.09% |
| 2. காபனீரொட்சைட் | B. 20.95% |
| 3. நைதரசன் | C. 0.93% |
| | D. 0.03% |

1. ABC 2. BDA 3. DBA 4. BCA (........)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

17. கண்டமேடைகளில் அமைந்த தீவுகள் 'அ' நிரலில் காட்டப்பட்டுள்ளன. தீவுகள் அமைந்துள்ள கண்டமேடைகளைக் கொண்ட கண்டங்களின் பெயர்கள் 'ஆ' நிரலில் காட்டப்பட்டுள்ளன. 'அ' ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. போர்னியோ | A. ஆசியா |
| 2. தஸ்மேனியா | B. ஆபிரிக்கா |
| 3. மடகாஸ்கார் | C. ஐரோப்பா |
| | D. அவுஸ்திரேலியா |

1. BAD 2. BCA 3. DCB 4. ADB (.........)

18. கண்ட நிலப்பரப்பில் காணப்படும் பரந்த நில உருவ வகைகள் 'அ' நிரலில் காட்டப் பட்டுள்ளன. அந்நில உருவ வகைகளுக்கு உதாரணமாகக் கூறக்கூடியவற்றின் பெயர்கள் 'ஆ' நிரலில் தரப்பட்டுள்ளன. 'அ' ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. மலைத்தொடர்கள் | A. திபெத் |
| 2. மேட்டுநிலங்கள் | B. நுல்லாபார் |
| 3. சமவெளிகள் | C. பைக்கால் |
| | D. றொக்கி |

1. DAB 2. DCB 3. BAD 4. BCD (.........)

19. உலகில் இரும்பு உற்பத்தியில் முக்கியம் வகிக்கும் நாடுகள் 'அ' நிரலில் காட்டப் பட்டுள்ளன. அந்நாட்டுக்குரிய முக்கிய இரும்புருக்கு மையங்கள் 'ஆ' நிரலில் தரப்பட்டுள்ளன. 'அ' ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. சீனா | A. யோக்கஹாமா வலயம் |
| 2. ஜப்பான் | B. பிற்ஸ்பேர்க் பிரதேசம் |
| 3. ஐக்கிய இராச்சியம் | C. தெற்கு மஞ்சூரிய பிரதேசம் |
| | D. பர்மிங்ஹாம் பிரதேசம் |

1. CDA 2. CAB 3. CAD 4. DAB (.........)

**20 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.**

20. ...................................................... காரணமாக வளிமண்டலம் புவியுடன் இணைந்து காணப்படுகின்றது.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

21. ...................................................... முறையின் அடிப்படையிலும் இட அமைவு அடிப்படையிலும் சமவெளிகள் கரையோரச் சமவெளி, வண்டற் சமவெளி, பனிக்கட்டியாற்றுச் சமவெளி போன்ற விஷேட பெயர்கள் பெறுகின்றன.

22. விவசாய நிலப் பயன்பாட்டில் ...................................................... மற்றும் வர்த்தக விவசாயத்துக்காக நிலத்தினைப் பயன்படுத்துவதே பிரதான அம்சங்களாக உள்ளன.

23. 1972 இல் சிறு ஏற்றுமதி பயிர்கள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதன் பின் ஏற்றுமதி பயிர் ...................................................... திட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

24. இன்றைய உலகில் சக்தி மூலவளங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் முடிவில்லாத ...................................................... பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

25. களுகங்கை மொறஹகந்த நீர்த்தேக்கத் திட்டம் ...................................................... அபிவிருத்தித் திட்டத்தின் இறுதிக் கட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

26. இலங்கையின் அந்நியச் செலாவணி உழைப்பில் அதிக பங்களிக்கும் கைத்தொழில் துறையில் ...................................................... கைத்தொழில் மட்டும் 41% வருமானத்தை 2012 இல் பெற்றுக் கொடுத்துள்ளது.

27. மனிதன் தனது சூழலில் காணப்படும் சில அம்சங்களைப் படமாக்கும் முயற்சியில் உருவான மிகப் பழமையான படமாக ...................................................... வரைந்த படம் கருதப்படுகின்றது.

28. தற்பொழுது பல்வேறு வகையான புவியியற் தகவல்களை மிக நுட்பமாகப் படமாக்கும் நோக்கிலான நுட்பமுறைகளில் ...................................................... என ஆங்கிலத்தில் சுருக்கமாகக் குறிப்பிடப்படும் பூகோள இட நிலைப்படுத்தல் முறைமையும் ஒன்றாகும்.

29. இலங்கை 1 : 50000 இடவிளக்கப் படங்களில் நிலவுருவங்கள் ...................................................... மூலம் காட்டப்படுகின்றது.

30. 92 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வரையப்பட்டுள்ள இலங்கை 1 : 50000 படம் ஒன்றில் காட்டப்படும் பிரதேசத்தின் பரப்பளவு ...................................................... சதுரக் கிலோ மீற்றர்கள் ஆகும்.

**31 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31. புவியின் மேற்பரப்பிலிருந்து 8 - 12 கிலோமீற்றர் உயரம் வரை பரந்து காணப்படும் வளி மண்டலப்படை.

    1. வெப்ப மண்டலம் 2. இடை மண்டலம்
    3. படை மண்டலம் 4. மாறன் மண்டலம் (.........)

32. மாறன் மண்டலத்தின் மேல் எல்லையின் பெயர்,

    1. மாற்றரிப்பு 2. படைத்தரிப்பு
    3. இடைத்தரிப்பு 4. கூற்றன்பேர்க் (.........)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

33. தேம்ஸ் நதி உற்பத்தியாகும் மூலம்,

1. ஊற்று 2. ஏரி
3. உருகிய பனி 4. மேற்கூறிய யாவும் (.........)

34. அதிக விளைச்சல் தரும் புதிய கோதுமை இனம்,

1. பொன்னி 2. கப்றுகா 3. நொரின் 10 4. லூலா (.........)

35. தேயிலைச் செய்கைக்குப் பொருத்தமான மண்,

1. கபூக் 2. செம்பூரான் ஈரக்களி 3. வண்டல் மண் 4. சேணாசம் (.........)

36. இலங்கையில் சித்திரநெல்லா பயிராகும் பிரதேசம்,

1. இரத்தினபுரி 2. களுத்துறை 3. மன்னார் 4. மாத்தறை (.........)

37. இலங்கையில் உள்ளூர் வெளியூர் சந்தைகளுக்காக மரக்கறிகள் பெரியளவில் பயிரிடப்படும் மாவட்டங்கள்,

1. அனுராதபுரம், மொனராகலை, அம்பாறை, கொழும்பு
2. யாழ்ப்பாணம், பதுளை, மாத்தளை, களுத்துறை
3. பதுளை, மாத்தளை, கண்டி, அம்பாந்தோட்டை
4. கம்பஹா, களுத்துறை, கொழும்பு, காலி (.........)

38. 
- பிளாஸ்ரிக்
- களைகொல்லி
- இரசாயன உரங்கள்
- செயற்கை இறப்பர்

மேற்குறிப்பிட்ட உற்பத்திகளுடன் தொடர்புபட்ட கைத்தொழில்,

1. உணவு மற்றும் பான வகைகளின் உற்பத்திக் கைத்தொழில்
2. இலத்திரனியல் கைத்தொழில்
3. பெற்றோலிய, இரசாயனக் கைத்தொழில்
4. மோட்டார் வாகனப் பொருத்தும் கைத்தொழில் மற்றும் படகு கட்டும் கைத்தொழில். (.........)

**39 மற்றும் 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

A. உயர் தொழில்நுட்பம்

B. இதுவரை உலகில் கண்டறியப்படாத வைரஸ், பற்றீரியா, பங்கசு போன்ற நோய்க்காவிகளின் பரம்பல்.

C. தொழிற்சாலைகளில் இயந்திரப் பாவனை.

D. வேலையில்லாப் பிரச்சினை.

E. பயிற்றப்பட்ட தொழிலாளர்.

39. ஒன்றில் ஏற்படும் அதிகரிப்பானது மற்றையதில் பற்றாக்குறையை ஏற்படுத்தும் என்பதை எடுத்துக் காட்டும் கூற்றுக்களைக் கொண்ட சோடி,

1. A மற்றும் B 2. C மற்றும் E
3. C மற்றும் D 4. A மற்றும் C (.........)

40. ஒன்றில் ஏற்படும் அதிகரிப்பானது மற்றையதிலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதை எடுத்துக் காட்டும் கூற்றுக்களைக் கொண்ட சோடி,

1. A மற்றும் B 2. D மற்றும் A
3. E மற்றும் D 4. D மற்றும் B (.........)

(1 x 40 = 40 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

## புவியியல் II

- **இவ்வினாத்தாள் I, II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.**
- **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**
- **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.**

## பகுதி I

01.அ. 1 : 50000 அளவுத் திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தினைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**இலக்கம் (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.**

i. படத்தின் அளவுத் திட்டம் காட்டப்பட்டுள்ள முறை.
(நேர் கோட்டளவுத் திட்டம் / வகைக்குறிப்பின்ன அளவுத்திட்டம் / சொற்களில்)

ii. C எழுத்தால் சுட்டிக் காட்டப்படுவது.
(அகல நெடுங்கோட்டமைவு / தேசிய மெற்றிக் ஆள்கூறு / திரிகோண கணித நிலையம்)

iii. அடைப்பு D யில் செய்கை பண்ணப்படும் பயிர்.
(தென்னை / தேயிலை / பிறபயிர்)

iv. F எழுத்தால் காட்டப்பட்டுள்ள நிர்வாக எல்லை.
(மாகாண / மாவட்ட / பிரதேச செயலர் பிரிவு)

v. வழங்கப்பட்டுள்ள படத்தில் காணப்படும் பெருந்தெருக்களில் அநேகமானவை.
(A தரத்தவை / B தரத்தவை / சிறுவீதிகள்)

vi. படத்தில் காட்டப்பட்டுள்ள தேசிய (மெற்றிக் அளியடைப்பு) ஆள்கூறுகளில் ஒன்றின் பெறுமானத்தை எழுதுக.

vii. அடைப்பு G இல் அதிகமாக எம்மதத்தவர்கள் வாழ்கின்றார்கள்?

viii. P, Q என்பவற்றுக்கிடையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர்கள்?

ix. படப்பிரதேசத்தில் வெளியரும்புப் பாறை காணப்படும் பகுதி ஒன்றைத் திசை அடிப்படையில் குறிப்பிடுக.

x. படப்பிரதேசத்தில் பெருமளவு நிலப்பரப்பில் பயிராகும் பயிர் எது?


(10 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

ஆ. உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு




i. உலகில் பாற்பண்ணை உற்பத்தியில் முக்கியம் பெறும் நியூசிலாந்து நாட்டைச் சுட்டி நிற்கும் எழுத்து.

ii. மூன்றாவது உலக யுத்தம் ஏற்பட்டுவிடுமோ எனும் அச்சத்தை ஏற்படுத்திய வண்ணம் இருக்கும் அரசியல் நெருக்கடிகள் நிறைந்திருந்த கொரியக் குடாநாடு.


iii. விக்டோரியா, ஏரியிலிருந்து உற்பத்தியாகிப் பாய்ந்து செல்லும் நைல் நதியைக் குறிக்கும் எழுத்து.

iv. அல்ப்ஸ் மலைத்தொடரைக் குறித்துக் காட்டும் எழுத்து.

v. தரையில் அமைந்துள்ள கஸ்பியன் கடலைக் குறித்து நிற்கும் எழுத்து.

(5 புள்ளிகள்)

இ. உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



Agaram.LK - Keep your dreams alive!

i. இலங்கையில் காற்று, சூரியஒளி என்பவற்றால் இயங்கக்கூடிய மிகப்பெரிய மாற்றுச் சக்தி மின்நிலையம் அமையவுள்ள 'பூநகரி' எனும் இடம் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து.

ii. இலங்கையின் ஆகக்கூடிய அகலம், பரப்பளவு என்பவற்றில் மாற்றம் ஏற்படக் காரணமாகும் கொழும்பு துறைமுக நகரத்தைச் சுட்டும் எழுத்து.

iii. மகாவலியின் கிளையாகிய அம்பன் கங்கையில் இணையும் களுகங்கையில் அமைந்த களுகங்கை நீர்த்தேக்கத்தைக் குறிக்கும் எழுத்து.

iv. தரையில் ஆழமாக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் குறித்து நிற்கும் எழுத்து.

v. வெண்களி உற்பத்தியில் முக்கியம் பெறும் பொரலஸ்கமுவவைச் சுட்டிநிற்கும் எழுத்து.

(5 புள்ளிகள்)

## பகுதி II

02.i. நீர்க்கோளத்தில் உள்ளடங்கும் புவிமேற்பரப்பிலுள்ள பாரிய நீர்நிலைகளின் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii.a. உலகின் மொத்த நீர்ப்பரம்பலில் மனிதனால் பயன்படுத்தக்கூடியதாக உள்ள நீரின்சதவீதம் யாது

b. நீரின் தரம் குறைவடைந்து செல்வதற்குக் காரணமாகும் மனித நடவடிக்கைகளில் இரண்டைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

iii.a. கற்கோளத்தில் காணப்படும் நீரின் வடிவங்கள் இரண்டும் எவை?

b. நீரின் பயன்பாடுகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பற்றி விவரிக்குக.

(5 புள்ளி)



03.i. படத்தில் காட்டப்பட்டுள்ள (A) காலநிலைப் பிரதேசத்தினதும், (B) இயற்கைத் தாவரத்தினதும் பெயர்களை முறையே குறிப்பிடுக. (2 புள்ளி) (2 புள்ளி)

ii. நீர் குறிப்பிட்ட காலநிலைப் பிரதேசம் அமைந்துள்ள பிரதான காலநிலை வலயத்தின் விசேடமான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

iii. நீர் வாழும் பிரதேசத்தில் காலநிலை எவ்வாறு மனித நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றதென்பதை மூன்று உதாரணங்கள் தந்து விளக்குக. (5 புள்ளி)

04.i. உலகில் பிரதானமாக நெல் பயிரிடப்படும்

a. தென்னாசியா தவிர்ந்த ஆசிய நாடு ஒன்றினையும்,

b. ஆசியாவிற்கு வெளியிலுள்ள பிரதேசம் ஒன்றினையும் குறிப்பிடுக. (2 புள்ளி)




agaram.lk

www.agaram.lk

ii. நெற்பயிற்செய்கைக்குச் சாதகமான புவியியற் காரணிகளுள் மூன்றைப் பற்றிக் குறிப்பிடுக. (3 புள்ளி)

iii. உலகின் நெற்பயிர்ச்செய்கையில் தற்போது அவதானிக்கக்கூடிய விசேட பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றைப் பற்றி விளக்குக. (5 புள்ளி)


05.i. அருகில் உள்ள இலங்கைப் படத்தில் A மற்றும் B எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ள பெருந் தோட்டப் பயிர்கள் தொடர்புபட்ட ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் இரண்டினதும் பெயர்களை முறையே குறிப்பிடுக. (2 புள்ளி)




ii. இன்று இலங்கையின் நெற்செய்கையில் கூடிய கவனம் செலுத்தக் காரணங்களாக விளங்கும் நெல்லின் முக்கியத்துவங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளி

iii. இலங்கையின் விவசாயம் தொடர்பில் எழும் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றைப் பற்றி விளக்குக. (5 புள்ளி)

06.




i. கைத்தொழில் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் பின்வரும் காரணிகளுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

1. சக்தி மற்றும் வலு.
2. அரசாங்கக் கொள்கை. (2 புள்ளி)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!




agaram.lk

ii. அருகில் உள்ள உலகப் படத்தில் இலக்கம் 1, 2, 3 என்பவற்றால் காட்டப்பட்டுள்ள இரும்புருக்கு உற்பத்திப் பிரதேசங்கள் இடம்பெறும் நாடுகளின் பெயர்களை முறையே எழுதுக. (3 புள்ளி)

iii. உலகின் இரும்புருக்குக் கைத்தொழிலின் போக்குகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (5 புள்ளி)

07.i. இலத்திரனியல் உபகரணங்கள் இரண்டின் பெயர் தருக. (2 புள்ளி)

ii. அருகில் தரப்பட்ட வரைபின்படிக்கு இலத்திரனியல் உபகரணங்களின் உலக உற்பத்தியில்




A. கூடுதலான வீதத்தினைக் கொண்ட கண்டம் எது?

B. ஐரோப்பாக் கண்டம் எத்தனையாம் இடம் வகிக்கின்றது?

C. மிகக் குறைந்த வீதத்தினைக் கொண்டதாக விளங்கக்கூடிய கண்டங்களுள் ஒன்றின் பெயர் தருக. (3 புள்ளி)

iii. இலத்திரனியல் உபகரண உற்பத்தியில் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றைப் பற்றி விளக்குக. (5 புள்ளி)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk